

கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு. கழக துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. ஆகியோர் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொருளாளர் முன்னாள் விழுப்புரம் நகர மன்ற தலைவர் விழுப்புரம் இரா.ஜனகராஜின் புதல்வர் அருண்குமாரின் திருமணத்தையொட்டி நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்கள். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, விழுப்புரம் நகர மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி சக்கரை, நகராட்சித் துறை அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் உடன் இருந்தனர்.



சேலம், சிறுமலர் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான மிதிவண்டிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மேயர் ஆ.இராமச்சந்திரன், மாவட்ட கல்வி அலுவலர்கள் நரசிம்மன், பாலமுருகன், பள்ளி தலைமை ஆசிரியர் லூயி பெர்னான்டோ உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### மதினாவில் பேருந்து விபத்து:

# இந்தியர்கள் உயிரிழந்தது குறித்து அதிர்ச்சிக்குள்ளானேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, நவ. 18-**

**“மதினாவில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக் குள்ளானேன்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த சம்பவம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு

மதினாவில் நிகழ்ந்த துயரமான பேருந்து விபத்தில் சிக்கி, இந்தியாவில் இருந்து உம்ரா புனிதப்பயணம் சென்றிருந்த பலர் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளா னேன்.

உற்றாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இத்துயர்மிகு வேளையில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த நபர் முழுமையான மருத்துவ சிகிச்சை பெற்று விரைவில் நலமடைய விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத் தளப் பதிவில் கூறியுள்ளார்.

### தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின்

# அரிய ஆவணங்களை ஆய்வு செய்வோரிடமிருந்து - விண்ணப்பங்கள்!

## அமைச்சர் கோவி.செழியன் வேண்டுகோள்!

சேலம், நவ. 18-

தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையில் தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்களிடமிருந்து 28.11.2025 வரை விண்ணப்பங்கள் பெறப்படும் - என்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியாள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ் சமூகத்தின் பெருமைமிகு வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை மாதம் ரூ.50,000 உதவித் தொகையுடன் ஆராய்ந்து ஆய்வு மேற்கொள்ள ஆராய்ச்சியாளர்கள் தேவை என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

பழமைமிகு நமது தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்தைய அரசுத் துறை ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. “மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்” என்ற பெயரில் அழைக்கப்பட்ட இக்காப்பகம் 1909 முதல் தற்போதுள்ள ஆவணக் காப்பகக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

1633ஆம் ஆண்டு முதலான புத்தகங்களும், 1670ஆம் ஆண்டு முதலான பழமையான ஆவணங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வரலாற்றினை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மாறிவரும் காலத்திற்கேற்ப மீளுருவாக்கம் செய்யப்படும் என்றும், ஆண்டுதோறும் 10 முதல் 15 ஆய்வுகள் வரை மேற்கொள்ளப்படும் என்ற முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி மன்றம் மீளுருவாக்கம் செய்யப்பட்டும், 20 நபர்களுக்கு ஆராய்ச்சி உதவித் தொகை வழங்கப்பட்டு வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தின் அரிய ஆவணங்களை ஆராய்ந்து தமிழ்நாட்டின் பெருமைமிகு வரலாற்றினை வெளிகொண்டு வரும் வகையிலான ஆராய்ச்சியை ஓராண்டுக்கு மாதம் ரூ. 50,000 ஆராய்ச்சி உதவித் தொகையுடன் மேற்கொள்வதற்கு முதுகலை பட்டதாரிகள் அல்லது தனிநபர் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் நேற்று (17.11.2025) முதல் பெறப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவம், தகுதி மற்றும் பிற விவரங்கள் அனைத்தும் www.tamilnaduarchives.tn.gov.in என்கிற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள ஆராய்ச்சியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையவழியில் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் 28.11.2025 வரை விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இணையவழி மட்டுமே பெறப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தென்காசி - கடையநல்லூர் தொகுதிகளில் எஸ்.ஐ.ஆர்.பணி!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆய்வு!

தென்காசி, நவ.18 -

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி, கடையநல்லூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடியில் (SIR) பணியினை ஆய்வு மேற்கொண்டார்.

தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தென்காசி, கடையநல்லூர் தொகுதியில் எஸ்.ஐ.ஆர். பணியில் முழு கவனம் செலுத்தி தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி தென்காசி சட்டமன்றத் தொகுதி வீராணம் மத்திய ஒன்றியத்துக்கு உட்பட்ட சோலைசேரி,கருவந்தா, அச்சங்குன்றம், ஆகிய பகுதியில் வாக்காளர் தீவிரத் திருத்த பணிகளை ஆய்வு மேற்கொண்டார். வாக்குச்சாவடியில் உள்ள உதவி மையங்களின் அலுவலர் களிடம் (SIR) குறித்த பணி விவரங்களை கேட்டு, பொதுமக்களுக்கு உதவிட வேண்டுகோள் விடுத்து கேட்டுக் கொண்டார். பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA)

களிடம் தீவிர திருத்த பணிகளில் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும், வீடு, வீடாகச் சென்று பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் வீராணம் சேக் முகமது,அழகு சுந்தரம், ஜெயா ஐயப்பன், பேரூர் செயலாளர் பண்டாரம், சாம்பார் வடகரை ஜெயபாலன், முத்து, சுரண்டை நகர செயலாளர் கணேசன், வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### விரைவில் 25 ஆயிரம் மாணவ - மாணவிகளுக்கு வழங்கப்படும்!

# சேலம் மாவட்டத்தில் இதுவரை 1,06,181 பேருக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், நவ. 18-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் சிறுமலர் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், சிறுமலர் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 87,209 குழந்தைகளும், புதுமைப்பெண் திட்டத்தில் 33,419 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 17,760 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தில் 912 ஆம் வகுப்பு வரை 1,34,361 மாணவ மாணவிகளும், பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் மாநில அளவில் ரூ.7500 கோடி மதிப்பீட்டில் நவீனமாக்கும் திட்டமும், இல்லம் தேடிக்கல்வி திட்டத்தில் 10,589 மையங்களில் 1,74,107 மாணவர்கள் பயன் பெற்று சேலம் முதலிடம் பெற்றுள்ளது.

மேலும், எண்ணும் எழுத்தும் இயக்கத்தில் 1,75,165 மாணவர்களும், பள்ளி செல்லாப் பிள்ளைகளைக் கண்டறிய செயலி, உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள், வகுப்பறை உற்றுநோக்கு செயலி, முத்தமிழறிஞர் மொழி பெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், மாதிரிப் பள்ளிகள், தகைசால் பள்ளிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் என பள்ளிக்கல்வித்துறையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

துணை முதலமைச்சர் அவர்களால் 14.11.2025 அன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 84 மாணவர்களுக்கும் மற்றும் 77 மாணவிகளுக்கும் மொத்தம் 161 மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 2021-2022 ஆம் கல்வி ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற 51,058 மாணவர்களுக்கும், 55,123 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 1,06,181 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும். 13,842 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.

இன்றையதினம், சேலம், சிறுமலர் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 375 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட கல்வி அலுவலர்கள் நரசிம்மன், திரு.பாலமுருகன், பள்ளி தலைமை ஆசிரியர்.லூயி பெர்னான்டோ, மாமன்ற உறுப்பினர் திருமதி கிரிஜா குமரேசன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### மானூர் மேற்கு ஒன்றியம் – மதகு குறிச்சியில்

# வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணி!

## மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. திடீர் ஆய்வு!

நெல்லை, நவ.18-

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழக முதன்மைச் செயலாளர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. நேற்று முன்தினம் (16.11. 2025) திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதியில், மானூர் மேற்கு ஒன்றியம், மதகு குறிச்சி ஊராட்சி ரஸ்தா கிளையில் நடைபெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக அமைக்கப்பட்ட சிறப்பு உதவி முகாமில் திடீர் ஆய்வுப்பணி மேற்கொண்டார்.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் திருநெல்வேலி தொகுதி மானூர் மேற்கு ஒன்றியம் மதகு குறிச்சி ஊராட்சி ரஸ்தா கிளையில் நடைபெற்று வரும் வாக்குச்சாவடியில் உள்ள (SIR) பணியினை திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்கு பணியில் ஈடுபட்டிருந்த கழக நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினர். மேலும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) களிடம் வாக்காளர் தீவிர திருத்தப் பணியில் முழு கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து வாக்குச்சாவடியில் உள்ள உதவி மையங்களின் அலுவலர்களிடம் (SIR) குறித்த பணி விவரங்களை கேட்டு அறிந்து, பொதுமக்களுக்கு உதவிட வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

நிகழ்வில் மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், மாவட்ட பிரதிநிதி வின்சென்ட், பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் முகமது அலி, கிளைக் கழக செயலாளர் அரிச்சந்திரன், காளி பாண்டியன், மானூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் காணார்பட்டி சாமுவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி 35வது வார்டுக்குட்பட்ட தெ.தி. இந்து கல்லூரி அருகில் உள்ள ஸ்ரீ அவிட்டம் திருநாள் மகாராஜ மாநகராட்சி மைதானம் பகுதியில் ரூ. 85.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருள் மீட்பு வசதி மையத்தை மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் திறந்து வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.





மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட பாக்கியநாதபுரத்தில் சுமார் இரண்டாயிரம் பேருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ வழங்கினார். உடன் பூமிநாதன் எம்.எல்.ஏ., மூவேந்திரன், துரைகோபால்சாமி என்ற அன்பு, குரும்பன், சரவணன் அம்பலம், ஏ.கே.ஆறுமுகம், முத்துகணேசன், முகேஷ் சர்மா, தமிழ் சந்திரன், பவுன், பாக்யராஜ் என்ற ராஜேஷ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.